## தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ப.மு.எண் 1956 /அ1/ 2021 நாள் .11.2021

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் – தருமபுரி மாவட்டம் பி.அக்ரகாரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 03.10.2001 இல் காலமான திரு.கோ.கருணாகரன் என்பாரின் வாரிசு திரு.க.சக்திவேல் இளநிலை உதவியார் பாலக்கோடு மாவட்டக் கல்வி அலுவலகத் தருமபுரி மாவட்டம் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணைவழங்கப்பட்டது – தொடர்பாக.

பார்வை 1. தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் கடித ந.க.எண். 1965/அ1/2020 நாள். 05.10.2020

2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண். 42271/ஜே/இ4/2020 நாள். 28.09.2021

தருமபுரி மாவட்டம் பி.அக்ரகாரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 03.10.2001 இல் காலமான திரு.கோ.கருணாகரன் என்பாரின் வாரிசு திரு.க.சக்திவேல் இளநிலை உதவியாளார் மாவட்டக் கல்வி அலுவலகம், பாலக்கோடு என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 04.10.2018 முற்பகல் முதல் பார்வை 2 – ற்காண் கடிதத்தின்படி பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது

மேற்காண் பரர்வை 2 ற்காண் கடிதம் உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு-

1. பார்வை2 ற்காண் கடித நகல்
2. அசல் பணிப்பதிவேடு ஒரு பைண்டு
3. அசல் கருத்துருக்கள் மற்றும் கல்விச் சான்றுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
தருமபுரி

19.11.2021

பெறுநர்

திரு.க.சக்திவேல் இளநிலை உதவியாளார் மாவட்டக் கல்வி அலுவலகம், பாலக்கோடு
(மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல் –

மாவட்டக் கல்வி அலுவலர், பாலக்கோடு தருமபுரி மாவட்டம்

// பதிவஞ்சல் ஒப்புகையுடன் //

பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களது

செயல் முறைகள், சென்னை–6.

பிறப்பிப்பவர்: முனைவர். பூ.ஆ.நரேஷ்,

ந.க.எண்: 42271 / ஜே / இ4 / 2020 நாள்:28.09.2021.

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் – தருமபுரி மாவட்டம், பி.அக்ரஹாரம், அரசு மேல்நிலைப் பள்ளியில், தமிழாசிரியராகப் பணிபுரிந்து 03.10.2001–ல் பணிக்காலத்தில் காலமான திரு.கோ.கருணாகரன் என்பவரின் வாரிசுதாரர் திரு.க.சக்திவேல் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – 04.10.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து – ஆணையிடல்.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள். 01.08.2018.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செ.மு. ந.க.எண்.22582/ஜே/இ4/2020 நாள்.15.07.2020.
3. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள். 26.02.2021.
4. தருமபுரி, முதன்மைக் கல்வி அலுவலரின் செ.மு ந.க.எண்.5888/அ1/2018. நாள்: 02.10.2018
5. தருமபுரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.1956/அ1/2020. நாள்: 05.10.2020

**ஆணை:–**

பணியில் இருக்கும் போது காலமான அரசுப்பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.க.சக்திவேல் என்பவர் இளநிலை உதவியாளராக தருமபுரி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல் முறைகள் ந.க.எண்.5888/அ1/2018 நாள்.02.10.2018–ன்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் 04.10.2018 முற்பகல் முதல் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

த.பி.பா.

தற்காலிகமாக பணி அமர்த்தப்பட்டவரின் தந்தையார் திரு.கோ.கருணாகரன் என்பவர் தருமபுரி மாவட்டம், பி.அக்ரஹாரம், அரசு மேல் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்த போது பணியிடையில் 03.10.2001 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.க.சக்திவேல் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 21.09.2004 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 30.05.1985 என்றும், அவர் இடைநிலைக்கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் பார்வை 5-ல் காணும் கடிதத்தில் தருமபுரி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் தெரிவித்து அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட நிலையில், தருமபுரி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் பி.அக்ரஹாரம், அரசு மேல்நிலைப் பள்ளியில், தமிழாசிரியராகப் பணிபுரிந்த திரு.கோ.கருணாகரன் என்பவரின் வாரிசுதாரர் திரு.க.சக்திவேல் என்பார் பர்வை 3-ல் உள்ள அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்று 04.10.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் நிலையில் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அன்னார் பணியில் சேர்ந்த நாளான 04.10.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

த.பி.பா.

நிபந்தனைகள்:

1. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32எ(1)–ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை முடித்திட வேண்டும்.

2. தகுதிகாண் பருவ காலத்தில் இரண்டாண்டுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

இவ்வாணை குறித்து உரிய பதிவுகள் சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணைப்பு: அசல் கல்விச் சான்றுகள் மற்றும் கருத்துருக்கள் அசல்,
பணிப்பதிவேடு– தொகுதி –1

இணை இயக்குநர், (பணியாளர் தொகுதி)

26.9.2021

பெறுநர்: திரு. க.சக்திவேல்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக்கல்வி அலுவலகம்,
பாலக்கோடு,
தருமபுரி மாவட்டம்.

நகல்: முதன்மைக்கல்வி அலுவலர், தருமபுரி.

நகல்: கோப்பிற்கு.